**செ. கு. எண்**: 446 **நாள்**: 12.12.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 12.12.2012

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், சோழசிராமணி கிராமம், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பவானி கட்டளை தடுப்பணை – 3ல் 5.12.2012 அன்று ஜெனரேட்டர் இயந்திரத்தின் சோதனை ஓட்டத்தின் போது, சேலம் மாவட்டம், மேச்சேரி, காவேரிபுரத்தானூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. அருணாச்சலம் என்பவரின் மகன் ரமேஷ் தவறி கீழே விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த ரமேஷின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் ஈரோடு நகரைச் சேர்ந்த திரு. சந்திரன் என்பவரின் மகன் திரு. கணேஷ் மற்றும் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், குள்ளவீரன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனிசாமி என்பவரின் மகன் திரு. தர்மன் ஆகியோர் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து மிகவும் வருத்தம் அடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இவர்கள் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ரமேஷின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், சாதாரண காயமடைந்த திரு. கணேஷ் மற்றும் திரு. தர்மன் ஆகியோருக்கு தலா 10,000/-ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**